திரு. இரா. நெடுஞ்செழியன் : குறிப்பிட்ட ஒரு மொழியைப் படிக்க வேண்டுமென்று விரும்பி மாணவர்கள் முன் வரும்போது ஆசிரியர்கள் இல்லாத நிலையில் குறைந்த அளவு எவ்வளவு மாணவர்கள் கேட்டால் ஒரு ஆசிரியரை நியமிக்க திட்டம் இருக்கிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விவரம் சரியாக இல்லை. சுமார் 15 மாணவர்கள் இருக்கவேண்டும். குறிப்பிட்டதொரு மொழியைப் படிக்க வேண்டுமென்று விரும்பினால் ஆசிரியர்கள் அமைக்கதான் வேண்டு மென்பதை ஒப்புக்கொள்கிறேன். அப்படி அமைக்கப்பட்டு வருகிறது. எங் கேயாவது அப்படியில்லை என்றிருந்தால் அதை அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டு வந்தால், உதாரணமாக எங்களுக்கு தெலுங்கு வேண் டும், ஆனால் தெலுங்கு ஆசிரியர்கள் இல்லை என்று சொன்னால், உடனே கல்வி இலாகாவிற்கு அனுப்பி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய சொல்லி கவனம் செலுத்தி வருகிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : தமிழகத்தில் 2,000 உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. ஆனால் 100 பள்ளிகளுக்கும் குறைவாகவே இந்த மூன்று மொழிகளுக்கு இடம் அளித்திருக்கிறார்கள். அந்தப் பள்ளிகளில் எத்தனை ஆசிரியர்கள், எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்கள் என்ற கணக்கை சொல்லமுடியுமா ?

கனம் சபாநாயகர் : தனிக்கேள்வி போட வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : ஆசிரியர்கள் இல்லை என்ற காரணத்தினால் ஆசிரியர்களின் கணக்கை கொடுக்கமுடியவில்லை என்பது உண்மையா?

கனம் திரு எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் சொல்வது முற்றிலும் தவறு. அத்தனையிலும் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஏதாவது பள்ளியில் ஆசிரியர் இல்லை என்றால் அதை என் கவனத்திற்கு கொண்டு வந்தால் மேலும் கவனம் செலுத்தலாம்.

அரசாங்க விருந்தினர் இல்லம்

***294 கேள்வி—திரு. முனு ஆதி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை அரசாங்க எஸ்டேட்டிலுள்ள விருந்தினர் விடுதியில் (State Guest House) 1962-63 ஆண்டில் தங்கிச் சென்றவர்கள் எத்தனை பேர் ?

(இ) இவர்களில் மத்திய அமைச்சர்கள், மற்றைய மாநில அமைச் சர்கள் எத்தனை பேர்?

(உ) 1962–63-ல் அவ் விடுதியில் ஆன செலவுத் தொகை எவ் வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 378.

(*b*) 276 (Union Ministers 127 and Ministers of other States 149).

(*c*) Rs. 62,141·39 nP.

***295 கேள்வி—திரு. முனு. ஆதி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை அரசாங்க எஸ்டேட்டில் உள்ள விருந்தினர் விடுதியில் (State Guest House) பராமரிப்பிற்காக அரசாங்கம் செலவிடும் தொகை எவ்வளவு?

(இ) இச் செலவை ஈடு செய்யும் வகையில் இவ் விருந்தினர் விடுதி யில் தங்குபவர்களுக்கு மத்திய அரசாங்க மானியம் கிடைக்கிறதா?

(உ) இவ் விடுதியில் யார் யார் தங்கலாம் என்று திட்டம் செய்யப் பட்டுள்ளது?

17th March 1964]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The expenditure in 1962-63 was Rs. 62,141-39 nP.

(b) No.

(c) Ministers and Deputy Ministers of Government of India and other State Governments and high personages, Indian and Foreign are accommodated in the State Guest House. Subject to availability of accommodation highly placed officials of State and Central Governments are also accommodated.

திண்டிவனம் கூட்டுறவு அர்பன் பாங்க்

*296 கேள்வி—திரு. ஆ. தங்கவேலு : கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் கூட்டுறவு அர்பன் பாங்கு லிமிடெட் 28—6—1962-ல் பொன் விழா கொண்டாடியதற்கு அனுமதிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் அதிகமாகச் செலவு செய்த தொகை எவ்வளவு?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : (அ) பொது நிதியிலிருந்து ரூபாய் ஆறுயிரம் மட்டும்.

(இ) ரூபாய் ஐயாயிரத்து நானூற்று ஐம்பத்தெட்டு, நயா பைசா பத்தொன்பது.

திரு. ஆ. தங்கவேலு : அனுமதிக்கப்பட்ட தொகையும் அனுமதிக்கப் படாமல் செலவு செய்த தொகையும் திட்டத்தட்ட ஒன்றுகயிருப்பதால் அப்படி அனுமதிக்கு அதிகமாக செலவு செய்திருப்பதை செலவு செய்தவர் களிடமிருந்து வசூல் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : அவர்கள் ஜெனரல் பண்டிலிருந்துதான் இந்தத் தொகையை செலவழித்திருக் கிறுர்கள். காரணம் என்ன என்று ரெஜிஸ்ட்டிரார் கேட்டிருக்கிறுர். பதில் வந்த பிறகு என்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமோ அதை எடுக்க எண்ணிக்கொண்டிருக்கிறேம்.

திரு. ஆ. தங்கவேலு : அனுமதியில்லாமல் ஊதாரித்தனமாக செலவிடப்பட்டது என்று நகரத்திலுள்ள பொதுமக்கள் எண்ணுகிறுர்கள். ஆகவே அந்தச் செலவை செலவு செய்தவரிடமிருந்து வசூல் செய்ய தக்க நடவடிக்கைகள் எடுப்பதற்கு மேலும் அரசாங்கம் முயற்சிக்குமா?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்றாடியார் : ஊதாரித் தனமா இல்லையா என்பது அவர்கள் ஜெனரல் பாடி போட்டு பேச வேண்டிய நிலை. என்ன செலவு என்று கேட்கப்பட்டது. சில விவ ரங்கள் கிடைத்திருக்கிறது. ஊதாரித்தனம் என்று சொல்வதற்கில்லை. அது பற்றி கேட்டிருக்கிறேம். பதில் வந்த பிறகு பரிசீலனை செய்து வேண் டிய ஏற்பாடு செய்யப்படும்.

Loans to Members of Co-operative Institutions

* 297 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR : Will the Hon the Minister for Food be pleased to state—

(a) whether it is a fact that the Government have issued orders to the Commissioners of the Panchayat Union Councils not to grant loans to those who are members of the Co-operative Institutions such as Credit Societies and Land Mortgage Banks; and

(b) if so, the reasons therefor?